தினமணி

**நாளை விவசாயிகள் குறை தீர்வு கூட்டம்**

First Published : 28 Apr 2010 12:44:18 AM IST

திருவள்ளூர், ஏப். 27: திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு குறை தீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் வியாழக்கிழமை (ஏப்ரல் 29) நடைபெற உள்ளன.

÷மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வேளாண்துறை, வருவாய்த்துறை, மின் வாரியம், கூட்டுறவுத் துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மை பொறியியல் துறை, கால் நடைத்துறை, மீன் வளத்துறை, மண் வளப்பாதுகாப்புத் துறை உள்ளிட்ட விவசாயம் சார்ந்த அனைத்துத் துறை அதிகாரிகளும் பங்கேற்க உள்ளனர்.

÷எனவே இம்மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் விவசாயம் தொடர்பான குறைகளை மட்டும் மனுவாக கொடுத்து பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**கிருஷ்ணகிரியில் நாளை விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்**

First Published : 28 Apr 2010 04:10:20 AM IST

கிருஷ்ணகிரி, ஏப். 27: கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் வியாழக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் கூறியுள்ளார்.

கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் கலந்துகொண்டு தங்கள் குறைகளைத் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

**விவசாயக் கடனை செலுத்தாத டிராக்டர்கள் பறிமுதல்**

First Published : 28 Apr 2010 12:00:00 AM IST

செஞ்சி, ஏப். 27: விவசாய கடனில் ஒரு தவணை கூட செலுத்தாதவர்களின் டிராக்டர்களை ஆலம்பூண்டி பாரத ஸ்டேட் வங்கி பறிமுதல் செய்தது.

÷செஞ்சி வட்டம் ஆலம்பூண்டி கிளை வங்கியில் இருந்து விவசாயக் கடனைப் பெற்று டிராக்டர்கள் வாங்கி ஒரு தவணை கூட திருப்பி செலுத்தாதவர்கனின் டிராக்டர்களை ஆலம்பூண்டி பாரத ஸ்டேட் வங்கி கிளை மேலாளர் பால்ராஜ் மற்றும் உதவி மேலாளர் காமாட்சி உள்ளிட்டோர் திங்கள்கிழமை பறிமுதல் செய்தனர்.

**மல்லிகை வியாபாரிகள் நலன் கருதி உத்தப்பநாயக்கனூரில் வணிக வளாகம்**

First Published : 27 Apr 2010 12:17:03 PM IST

உசிலம்பட்டி, ஏப். 26: மல்லிகை சாகுபடி செய்யும் விவசாயிகள் நலன் கருதி மதுரை மாவட்டம், உத்தப்பநாயக்கனூரில் விரைவில் வணிக வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என, ஆட்சியர் சி.காமராஜ் தெரிவித்தார்.

உத்தப்பநாயக்கனூரில் இந்தியன் வங்கியின் புதிய கிளையை ஆட்சியர் திங்கள்கிழமை திறந்து வைத்துப் பேசியது:

இந்தியின் வங்கி சார்பில் "வித்யா ஷோபா' என்ற சிறப்புத் திட்டம் மூலம் 2009}2010}ல் சுமார் ரூ.1.46 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. உத்தப்பநாயக்கனூர் பகுதியில் மல்லிகை மலர் பெருமளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இப்பகுதி விவசாயிகள் நலன் கருதி வேளாண் விற்பனைக் குழு மூலம் விரைவில் வணிக வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், மலர் சாகுபடி விவசாயிகளுக்கு இந்த வங்கி குறைந்த வட்டியில் கடன் அளித்து வருகிறது. எனவே, இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

விழாவில் 11 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கும், 4 மலர் விவசாயிகளுக்கும் பால் உற்பத்தி செய்யும் 10 நபர்களுக் கும், கல்விக் கடன் என மொத்தம் ரூ.28.28 லட்சம் நிதியுதவியை ஆட்சியர் சி.காமராஜ் வழங்கினார்.

விழாவில் இந்தியன் வங்கித் துணைப் பொதுமேலாளர் எம்.கதிரேசன் பேசியது:

இந்தியன் வங்கி சார்பில் 2004}05}ம் ஆண்டு முதல் மகளிர் சுய உதவிக் குழுவினருக்குத் கடனுதவி வழங்கப்படுகிறது. இதில் உசிலம்பட்டி கிளை முதல் இடத்தில் உள்ளது. கல்விக் கடனாக இந்த வங்கி சார்பில் ரூ.6.75 கோடி வழங்கப்பட் டுள்ளது என்றார்.

இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் வே.பிச்சை, நபார்டு வங்கி உதவிப் பொதுமேலாளர் ஆர்.சங் கரநாராயணன், உத்தப்பநாயக்கனூர் வங்கிக் கிளை மேலாளர் எ.பட்

**முட்டை விலை ரூ. 2.28**

First Published : 27 Apr 2010 10:47:23 AM IST

நாமக்கல், ஏப். 26: தமிழகம் மற்றும் கேரளத்தில் முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை ரூ. 2.28 காசுகளாக நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

இரு மாநிலங்களுக்கான முட்டைகள் அனைத்தும் நாமக்கல் மண்டலத்தில் இருந்தே அனுப்பப்படுகிறது. நாமக்கல் மண் டலத்தில் நாளொன்றுக்கு 2.50 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. முட்டை விலையை நிர்ணயம் செய்ய தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) நாமக்கல்லில் இயங்கி வருகிறது. திங்கள்கிழமை கூடிய என்இசிசி விலை நிர்ணயக் குழுவானது முட்டை விலையை முந்தைய விலையில் இருந்து 3 காசுகள் உயர்த்தி முட்டை ஒன்றுக்கு ரூ. 2.28 என அறிவித்தது.

கோடை எதிரொலியாக முட்டை உற்பத்தி குறைந்து, நுகர்வு குறைந்து காணப்பட்டதால் 20 நாட்களுக்கு மேலாக முட்டை விலை ரூ. 2.25 காசுளாகவே இருந்து வந்தது. தற்போது, பிற மாநில சந்தைகளில் விலை உயர்ந்துள்ளதால் தமி ழகத்திலும் 3 காசுகள் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

**உடுமலை பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கு விருது**

First Published : 27 Apr 2010 10:51:13 AM IST

திருப்பூர், ஏப்.26: பட்டு வளர்ப்பில் புதிய முறையைக் கையாண்ட உடுமலையைச் சேர்ந்த அதிகாரி உள்பட மூவருக்கு மாவட்ட ஆட்சியர் விருதுகள் வழங்கி கௌரவித்தார்.

தமிழ்நாடு பட்டு வளர்ச்சித் துறை சார்பில் உடுமலை அலுவலகப் பகுதியைச் சேர்ந்த பட்டு விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, திரு ப்பூர் மாவட்டத்தில் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக மத்திய, மாநில அரசுகளின் நிதி யுதவியுடன் கிரியா ஊக்கித் திட்டத்தில், நவீன புழு வளர்ப்பு மனை 1,500 சதுர அடிக்கு மேலான பரப்பில் கட்டிய 5 விவசாயிகளுக்கு மானியத்தொகை ரூ.75 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.3.75 லட்சமும், 1,000 முதல் 1,500 சதுர அடி பரப்பில் நவீன புழு வளர்ப்பு மனை கட்டிய 17 விவசாயிகளுக்கு தலா ரூ.50 ஆயிரம் வீதம் மொத் தம் ரூ.8.50 லட்சம் மானியத்தொகை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இத் தொகைக்கான காசோலைகளை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள் கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி யில் ஆட்சியர் சி.சமயமூர்த்தி, சம்பந்தப்பட்ட விவசாயிகளிடம் வழங்கினார்.

மேலும், பட்டு வளர்ப்பு முறையில் சிறப்பாகப் பணியாற்றிய மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி ஜி.செல்வராஜ் மற்றும் பட்டு விவசாயிகளுக்கு சிறந்த முறையில் இளம்புழுக்கள் விநியோகம் செய்த சுந்தரராஜ், ராமகிருஷ்ணன் ஆகிய விவசா

யிகளுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. மாவட்ட வருவாய் அதிகாரி கே.வி.முரளிதரன், உடுமலை பட்டு வளர்ச்சி உதவி இயக்குநர் வே.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தாராபுரம் உழவர் சந்தையில் ரூ. 6 கோடி காய்கறிகள் விற்பனை**

First Published : 27 Apr 2010 10:50:40 AM IST

தாராபுரம், ஏப். 26: தாராபுரம் உழவர் சந்தையில் ஓராண்டில் ரூ. 6.18 கோடி மதிப்பிலான காய்கறிகள், பழங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தாராபுரம், அண்ணாநகரில் 2000-ம் ஆண்டு முதல் உழவர் சந்தை இயங்கி வருகிறது. இங்கு தாராபுரம், மூலனூர், குண்டடம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த உழவர்கள், தாங்கள் விளைவித்த காய்கறிகள், கீரைகள், பழங்களைக் கொண்டுவந்து, நியாய விலைக்கு விற்று பயனடைந்து வருகின்றனர்.

தற்போது உழவர் சந்தையில் 74 கடைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் கீரை வளாகமும் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2009 ஏப். 1-ம் தேதி முதல், 2010 மார்ச் 31-ம் தேதி வரை 42 ஆயிரத்து 318 விவசாயிகள், ரூ. 6.18 கோடி மதிப்பிலான 4,571 டன் காய்கறி, பழங்களைக் கொண்டு வந்து விற்பனை செய்துள்ளனர். இதன் மூலம் 7.58 லட்சம் நுகர்வோர் பயனடைந்துள்ளனர்.

இதுவரை 825 விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. நாளொன்றுக்கு சராசரியாக 120 விவசாயிகள், ரூ. 1.75 லட்சம் மதிப்பிலான 13 டன் காய்கறிகள், பழங்களை, 1,900 நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றனர் என்று, உழவர்சந்தை நிர்வாக அலுவலர் கே.குருபர காங்கேயன் தெரிவித்தார்.

தினமலர்

**மரக்கன்று நடு விழா**

உடுமலை : உடுமலை பிரஜா பிதா பிரம்ம குமாரிகள் ஈஸ்வர்ய வித்யாலயத்தின் கிளை சார்பில், உலக பூமிதினத்தையொட்டி, சாலையோரத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடந்தது. கொழுமம் ரோட்டிலுள்ள பீஸ் லேண்டில் நடந்த நிகழ்ச்சியில், உடுமலை கிளை ராஜயோக ஆசிரிய் மீனா, சாய்ராம், கனகராஜ், ஜெயானந்தன், ஈஸ்வர்ய மாணவர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**20 ஆண்டுகளாக தூர்வாராத பாசன வாய்க்கால்: உவர்ப்பாக மாறும் நீர் கருகும் நெற்பயிர்கள்**

சிதம்பரம் அருகே 3 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலங்களுக்கு வடிகாலாகவும், 2 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களுக்கு பாசன வாய்க்காலாகவும் உள்ள பெரிய வாய்க் கால் 20 ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாரப்படாமல் தூர்ந்து கிடக்கிறது. இதனால் அப்பகுதி விளை நிலங்கள் உவர்ப்பாக மாறி நெற்பயிர்கள் கருகி வருகிறது.

சிதம்பரம் அருகே கிள்ளை, தைக்கால், சிங்காரக்குப்பம், சி.மானம்பாடி, பகுதியில்  2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் கான்சாகிப் வாய்க் கால் மூலம் வரும் காவிரி தண்ணீரைக் கொண்டு அப்பகுதியினர் விவசாயம் செய்து வந்தனர். விவசாயத் திற்கு தண்ணீர் தட் டுப்பாடு ஏற்பட்டதில் இருந்து மூன்று போக விவசாயம் தற்போது இரண்டு போகமாக குறைந்துள்ளது. அத்துடன், வாய்க்கால்கள் தூர் வாராமல் கிடப்பில் போட்டதாலும், மழை காலங் களில் தேங்கிய

தண்ணீர் வடியாததாலும் நடவு பயிர்கள் அழுகியது. கடல் நீர், பாசன வாய்க்காலில் கலந்ததால் விவசாய நிலம் உவர்ப்பு தன்மையாக மாறியது. ஆழமாக இருந்த வாய்க்கால்கள் தூர்ந்ததால் விவசாயத்திற்கு தண்ணீர் தேக்கி வைக்க முடியாத நிலையும் ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் ஒரே போகமாக சித்திரைப் பட்டத்தை (நவரை சாகுபடியை) நம்பி உள்ளனர்.

நஞ்சைமகத்துவாழ்க்கை பகுதியில் 3 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் வடிகாலாகவும், சி.மானம்பாடி உள் ளிட்ட 2 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் பாசன வாய்க்காலாகவும் உள்ள பெரிய வாய்க் கால் 20 ஆண்டுகளுக்கு மேல் தூர்வாரப்படாமல் தூர்ந்து புதர்மண்டி பாசனத்துக்கு தகுதியற்று, வாய்க்காலும், வரப் பும் சம தளமாக காட்சியளிக்கிறது. கடந்த 40 ஆண்டுகளுக்கு முன் தண்ணீர் பெருக் கெடுத்து ஓடிய வாய்க்காலில் தைக்காலில் இருந்து மானம் பாடி வரை கடந்த 20 ஆண்டுகளாக தூர்வாராததால் முழுக் குத் துறை தீர்த்தவாரி ஆற்றில் தண்ணீர் ஓதம் ஏற்பட்டு கட்டக்குச்சி ஆற் றின் வழியாக விவசாய நிலங்களில் உப்புத் தண்ணீர் பாய்ந்து நெற்பயிர்கள் கருகி வருகிறது.

பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள கிள்ளை தைக்காலில் இருந்து சிங்காரக்குப்பம், சி.மானம் பாடி வழியாக பொன்னந் திட்டு வடிகால் வரை உள்ள பெரியவடிகால் வாய்க்காலை தூர்வாரி, ஆழப்படுத்துவதுடன், கிளை வாய்க் கால்களான பனங் காட்டு, பக்கிரி, ராமு, முருகன் கோயில், நெடுஞ்சி, தொட்டி மதகு உள் ளிட்ட 50க்கும் மேற் பட்ட கிளை வாய்க்கால்களையும் ஆழப்படுத்த வேண்டும். இல்லையெனில் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்படும். பக்கிங்காம் கால்வாய் மாஸ்டர் பிளானில் இருப்பதாக காரணம் காட்டி புறக்கணிக்காமல் இப்பகுதியில் தூர்ந்துள்ள வாய்க்கால்களை பார்வையிட தனிக்குழு அமைத்து ஆய்வு செய்து, வாய்க்கால்களை தூர் வாரி, ஆழப்படுத்த வேண்டும்.

**உயிரிகள் காரணிகள் தயாரிப்பு மையம்: வேளாண்துறை அதிகாரிகள் ஆய்வு**

நெல்லிக்குப்பம்: உயிரிகள் காரணிகள் தயாரிப்பு மையத்தை வேளாண்மை துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அண்ணாகிராமம் வட் டாரம் கீழ் அருங்குணத் தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் உயிரியல் காரணிகள் தயாரிப்பு மையம் செயல்படுகிறது. விவசாய பயிர்களை தாக்கும் பூச்சிகளை இயற்கை பூச்சிகளை கொண்டு விரட்டுவதால் சுற்றுச்சூழல் பாதிக்கபடாது. இம் மையத்தை வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோவன் ஆய்வு செய்தார். மையத் துக்கு அரசு மானியமாக ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதனையடுத்து சர்க்கரை ஆலை கழிவில் இருந்து உரம் தயாரிப்பதையும் பார்வையிட்டார். உடன் துணை இயக்குனர் பாபு, உதவி இயக்குனர் சம்பத்குமார், அலுவலர் சந்திரராசு ராமதாஸ், தலைவி ஜெயா, பொரு ளாளர் லட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மாம்பழ சீசன் துவங்குவது தாமதம்**

மதுரை: ஏப்ரலில் களைகட்ட வேண்டிய மாம்பழ சீசன் இன்னும் தாமதமாவதால் பழங்களின் விலை இரட்டிப்பாகியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் இறுதி அல்லது ஏப்ரலில் மாம்பழ சீசன் துவங்கிவிடும். மதுரைக்கு திண்டுக்கல், நத்தம், புதுக்கோட்டை, அழகர்கோயில், அலங்காநல்லூர், பெரியகுளம், வத்றாப் உள்பட பல பகுதிகளில் இருந்து விற்பனைக்கு வரும். இந்த சீசன் ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் வரைகூட இருக்கும். மாம்பழ வரத்து அதிகரிக்கும் காலங்களில் விலை மலிவாக இருக்கும்.

இந்த ஆண்டு ஏப்ரல் முடியும் தறுவாயிலும் சீசன் துவங்காததால், கடந்த ஆண்டைக் காட்டிலும் விலை இரட்டிப்பாக உள்ளது. தற்போது சப்பட்டை கிலோ 60 முதல் 80 ரூபாய் (கடந்த ஆண்டு 25 முதல் 30 ரூபாய்) வரை விற்கிறது. கடந்த ஆண்டு 40 முதல் 45 ரூபாய்க்கு விற்ற இமாம்பசந்த் ரகம் இந்த ஆண்டு 70 ரூபாய்க்கு விற்பனையாகிறது. பாலாமணி கடந்த ஆண்டு 20 ரூபாய்க்கு விற்றது, இந்த ஆண்டு 50 ரூபாய்க்கு விற்கிறது. காலாப்பாடி கடந்த ஆண்டு 25க்கு

விற்றது இந்த ஆண்டு 50க்கு விற்கிறது. சில நாட்களாகத்தான் மாம்பழம் மார்க்கெட்டிற்கு கொஞ்சம் வருகிறது. இதனால் கடந்த வாரத்தைவிட விலை சற்று குறைந்துள்ளது.

சிம்மக்கல் வியாபாரி செந்தில் கூறியதாவது: இந்த ஆண்டு உரிய நேரத்தில் மழை பெய்யாததால் மாம்பழம் வரத்து குறைந்துள்ளது. காய் பிடிக்கும் நேரத்தில் போதிய மழை பெய்திருந்தால் பழங்கள் பெரிதாக வரும். சீசன் இந்த ஆண்டு ஜூனுக்குள் முடிந்துவிடும்போல் இருக்கிறது என்றார். அதேசமயம் பலாப்பழம் வரத்து துவங்கி, யானைக்கல் பகுதியில் குவிந்து கிடக்கின்றன.

**மாம்பழ விலை சரிகிறது: காபூல் மாதுளை கிலோ 170**

மதுரை: மதுரைக்கு மாம்பழ வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறைய துவங்கி உள்ளது. யானைக்கல் வியாபாரி செந்தில் கூறியதாவது : கடந்த வாரம் கிலோ 90 ரூபாய் வரை விற்கப்பட்ட மாம்பழம் நேற்று குறைய துவங்கியுள்ளது. சப்பட்டை ஒரு கிலோ 60 ரூபாய், இமாம்பசந்த் 80, காதர் 45, பாலாமணி 45, காலாபாடி 45, மல்கோவா 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆப்பிள் 110-130 ரூபாய், பேரிக்காய் 75, பன்னீர் திராட்சை 40, சோனா திராட்சை 80, தில் குஷ் திராட்சை 50, சப்பட்டை 20, அன்னாசி 30, பப்பாளி 15, காபூல் மாதுளை 170, சீட்லெஸ் மாதுளை 120, மலைவாழை ஒன்று 3.50, மோரீஸ் வாழை கிலோ 20, கிர்னி 30 ரூபாய்க்கு விற்கப்பட்டது, என்றார்.

**நெல் வரத்து குறைவால் அரிசி விலை உயர்வு**

மதுரை: மதுரைக்கு நெல் வரத்து குறைந்துள்ளதால், சில அரிசி ரகங்களின் விலை கிலோவிற்கு 50 காசு முதல் ஒரு ரூபாய் வரை அதிகரித்துள்ளது. அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க செயலாளர் சந்திரன் கூறியதாவது : கர்நாடக பொன்னி பழசு 38 ரூபாய், புதுசு 29 ரூபாய் என்பதில் மாற்றமில்லை. டீலக்ஸ் பொன்னி பழசு 31லிருந்து 32 ரூபாய்க்கும், புதுசு 24லிருந்து 25 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. வெள்ளை பொன்னி பழசு 35, புதுசு 26.50லிருந்து 27க்கும், செல்லப் பொன்னி பழசு 23, புதுசு 20லிருந்து 21க்கும் விற்கப்பட்டது. ஐ.ஆர். இருபது பழசு 23 ரூபாய், புதுசு 21லிருந்து 22 ரூபாய், ஐ.ஆர். 36 பழசு 22 ரூபாய், புதுசு 20லிருந்து 21 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பச்சரிசி சூப்பர் சன்னம் முதல் ரகம் 37 ரூபாய், அடுத்த ரகம் 30, புதுசு 28லிருந்து 29 ரூபாய், மாவு பச்சரிசி பழசு 21, பிரியாணி அரிசி முதல் ரகம் 52, அடுத்த ரகம் 51, 49 ரூபாய்க்கும், புதுசு 45 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது, என்றார்.

**எண்ணெய் விலை மாற்றமில்லை**

மதுரை: மதுரையில் இரு மாதங்களாக அனைத்து சமையல் எண்ணெய் வகைகளும் சீரான விலையில் விற்கப்படுகின்றன. எண்ணெய் வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது : 15 கிலோ டின் பாமாயில் 635 ரூபாய், ரைஸ்பிரான் ஆயில் 635, கடலை எண்ணெய் 1040 ரூபாய், சூரியகாந்தி எண்ணெய் 780, தேங்காய் எண்ணெய் 950, வனஸ்பதி 700, நல்லெண்ணெய் 1250, தும்பை நல்லெண்ணெய் 1700 ரூபாய் என்பதில் மாற்றமில்லை, என்றார்.

**பருப்பு விலை குறைகிறது**

மதுரை: இறக்குமதி செய்யும் கோதுமை, பருப்பு போன்றவற்றுக்கு ஜூன் வரை இறக்குமதி வரி கிடையாது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளதால், பருப்பு விலை குறைகிறது.

மதுரை பருப்பு வியாபாரிகள் சங்கச் செயலாளர் வெற்றிச்செல்வன்  கூறியதாவது : நேற்று நூறு கிலோ துவரம் பயறு நேற்று 4850 ரூபாயிலிருந்து 4900 ரூபாய்க்கும், பருப்பு 6600லிருந்து 6800க்கும் விற்கப் பட்டது. உளுந்தம் பயறு 4900லிருந்து 5100க்கும், பருப்பு 6700லிருந்து 6800க்கும், பாசி பயறு 6700லிருந்து 6900க்கும், பருப்பு 8100லிருந்து 8200க்கும், கடலை பருப்பு 2750லிருந்து 2700க்கும் விற்கப்பட்டது. கடலை பயறு 2200 ரூபாய், பட்டாணி பயறு 1500, பருப்பு 1700 ரூபாய் என்பதில் மாற்றமில்லை. ஜூன் வரை இறக்குமதி வரி கிடையாது என்ற அரசின் கொள்கை முடிவால், பருப்பு விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது, என்றார்.

**சித்ரா பவுர்ணமியால் காய்கறி விலை உயர்வு**

மதுரை: இன்று சித்ரா பவுர்ணமி என்பதால், மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் காய்கறி விலை உயர்ந்துள்ளது. சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது : ஒரு கிலோ தக்காளி 20 ரூபாய், உருட்டு தக்காளி 14, கத்தரிக்காய் 20, வெள்ளை கத்தரிக் காய் 15, பூசணிக்காய் 6, சுரைக்காய் 7, வெண் டைக்காய் 15, முட்டைகோஸ் 12, புடலங்காய் 20, நூக்கல் 12, கேரட் 15, பீட்ரூட் 14, முள் எங்கி 12, காலிபிளவர் 7-10, உருளை கிழங்கு 12, சேனை கிழங்கு 18, கருணைக்கிழங்கு 28, வெங்காயம் 10, சிறியது 15, பாகற்காய் 18, சிறியது 20, இஞ்சி 40, முருங்கைக்காய் 7, பீன்ஸ் 25, பட்டர் பீன்ஸ் 70, சோயா பீன்ஸ் 40, கறிவேப்பிலை 20, கொத்தமல்லி 25, புதினா 7, கீரை வகைகள் 10, அவரைக்காய் 25, பட்டாணி 50, கொத்தவரை 9 ரூபாய்க்கு விற்கப் பட்டது, என்றார். சென்ட்ரல் மார்க் கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**கரும்பு விவசாயிகளுக்காக வயல்வெளி செயல் விளக்கம்**

சோழவந்தான்: சோழவந்தான் அருகே கரும்பு சாகுபடி விவசாயிகளுக்காக வயல்வெளி செயல்விளக்க கூட்டம் நடந்தது. அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையின் சார்பில், மட்டப்பாறை விவசாயி ஜெயபாண்டியன் நிலத்தில் வயல்வெளி விழா துவங்கியது. தலைமை கரும்பு அலுவலர் (பொறுப்பு) நவநீதன் கூறுகையில், "கரும்பு கருணையை ஐந்து அடி பார் விட்டு நடவு செய்யவேண்டும். வறட்சியான காலமானதால், சொட்டு நீர் பாசனம் அமைத்து, உயிர்உரங்களை பயன்படுத்துவதால் கூடுதல் மகசூல் பெறலாம்," என்றார். கரும்பு விதை கருணையை நேர்த்தி செய்தல் குறித்து வாடிப்பட்டி கோட்ட கரும்பு அலுவலர் சாரதா செயல்விளக்கம் செய்து காட்டினார். கரும்பில் 'ஜி' வைரஸ் கரைசலை பயன்படுத்தி, இளம்குருத்து புழுவை கட்டுபடுத்தும் முறையினை திருத்தங்கல் கோட்ட அலுவலர் முரளி விவக்கினார். ஆலை உதவியாளர்கள் ராஜேந்திரன், முரளிதரன் கண்காட்சியினை விளக்கினர். ஆலை நிர்வாக உதவியாளர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

**நீர்பிடிப்பு பகுதியில் மழை: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

மேட்டூர்: நீர்பிடிப்பு பகுதியில் பெய்த கோடைமழையால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று முன்தினம் 71.700 அடியாகவும், நீர் இருப்பு 34.178 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. கர்நாடகாவில் உள்ள காவிரி நீர்பிடிப்பு பகுதியில் கோடைமழை பெய்ததால் நேற்று முன்தினம் விநாடிக்கு 2, 472 கன அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று மாலை 4 மணிக்கு 3, 578 கனஅடியாக அதிகரித்தது.நேற்று மாலை அணையின் நீர்மட்டம் 71.770 அடியாகவும், நீர் இருப்பு 34.239 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. விநாடிக்கு ஆயிரத்து 900 கனஅடியாக இருந்த டெல்டா மாவட்ட குடிநீர் தேவைக்கான நீர்திறப்பு நேற்று முன்தினம் இரவு முதல் 2 ஆயிரத்து 100 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

**குறுவை சாகுபடிக்காக டி.ஏ.பி. உரம் வருகை**

கும்பகோணம்:ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட குறுவை சாகுபடிக்கென ஒரிசாவில் இருந்து நேற்று 2 ஆயிரத்து 600 டன் டி.ஏ.பி உரம் ரயில் மூலம் வரவழைக் கப்பட்டுள்ளது.தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் தற்போது கோடை நெல் மற்றும் உளுந்து பயறு சாகுபடி நடந்து வருகிறது. இதன் அறுவடை பணிகள் முடிவடைந்ததும் ஜூன் மாதத்தில் முன்பட்ட குறுவை சாகுபடி பணிகள் தொடங்கப்பட உள்ளது.

குறுவை சாகுபடிக்கென முதல்கட்டமாக 2 ஆயிரத்து 629 டன் டி.ஏ.பி உரம் நேற்று ஒரிசா மாநிலம் பார்த் துறைமுகத்தில் இருந்து 42 ரயில் வேகன் கள் மூலம் கும்பகோணம் வந்திறங்கியது. அவற்றை லாரிகள் மூலம் இந்த 3 மாவட்டங்களில் உள்ள 160 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படஉள்ளது. கூட்டுறவு விற்பனை இணைய அதிகாரிகள் ரயில் வேகன்கள் மூலம் உரங்களை பெற்று மயிலாடுதுறை, திருவாரூர், மன்னார் குடி, கும்பகோணம், நாகை போன்ற பல்வேறு இடங்களில் உள்ள கூட்டுறவு கிடங்குகளுக்கு அனுப்பி வைத்தனர்.

**பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன்பெற அழைப்பு**

பெரியகுளம்: பயிர் காப்பீட்டு திட்டத் தில் விவசாயிகள் பயன் பெற விவசாயத்துறை அலுவலகம் ஆலோசனை வழங்கியுள்ளது. பெரியகுளம் விவசாய உதவி இயக்குனர் பெரியசாமி கூறுகையில், மத்திய அரசின் தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுதிட்டம், மாநில அரசுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

திட்டத்தின் கீழ், வறட்சி, புயல், வெள்ளம் உட்பட இயற்கை சீற்றங் களால் பாதிப்பு ஏற்படும்போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிருக்கு சேதம் ஏற்படும் போதும் விவசாயிகளுக்கு காப்பீடு மற்றும் நிதியுதவி அளிக்கப் படுகிறது. அனைத்து விவசாயிகளும் திட்டத்தில் பயன்பெறலாம். கூட்டுறவு வங்கிகள், வர்த்தகவங்கிகள், கிராம வங்கிகளிடம் பயிர் கடன், நகைக்கடன் பெறுபவர்கள் அனைவரும் திட் டத்தில் சேர்ந்து கொள்ளலாம். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு காப்பீட்டு கட்டணத் தொகையில் மத்திய, மாநில அரசுகளால் 50 சதவீதம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரரின் பெயரில் சேமிப்பு கணக்கு வங்கிகளில் வைத்திருக்க வேண்டும். விவசாயிகள், பிரிமியம் தொகை கட்டுவதற்கு விவசாயத்துறை மற்றும் வங்கி அலுவலர்கள் ஆலோசனை வழங்குவர் என்றார்.

**விவசாய தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு ரூ.446 கோடி உதவித்தொகை வழங்கல்: வாரியத்தலைவர் தகவல்**

தூத்துக்குடி: "தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள்,விவசாயிகள் நலவாரியத்தின் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் 5,41,212 பயனாளிகளுக்கு 446 கோடியே 27 லட்சத்து 32 ஆயிரத்து 762 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதாக" அதன் தலைவர் கே.பி.,ராமலிங்கம் தெரிவித்தார்.

தூத்துக்குடியில் நேற்று அவர் கூறியதாவது:"தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள், விவசாயிகள் நலவாரியத்தில் கடந்த மூன்று ஆண்டில்(சென்னை தவிர்த்து) 75,73,643 ரேஷன்கார்டுகள் வழங்கப்பட்டு அதன் மூலம் 1,73,00,761 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டு, அதில் 5,41,212 பயனாளிகளுக்கு 446 கோடியே 27 லட்சத்து 32 ஆயிரத்து 762 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, உறுப்பினர்கள் திருமணத்திற்காக 20,995 பயனாளிகளுக்கு 7 கோடியே 99 லட்சத்து 97 ஆயிரம் ரூபாயும், உறுப்பினர்கள் குழந்தைகளின் திருமணத்திற்காக 1,51,196 பயனாளிகளுக்கு 61 கோடியே 14 லட்சத்து 80 ஆயிரம் ரூபாயும் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. முதியோர் உதவித்தொகையாக 1,35,834 பயனாளிகளுக்கு, 93 கோடியே 91 லட்சத்து 2 ஆயிரத்து 412 ரூபாய், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகையாக 1,43,712 பயனாளிகளுக்கு 175 கோடியே 77 லட்சத்து 93 ஆயிரத்து 500

ரூபாய், விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகையாக 6,283 பயனாளிகளுக்கு 61 கோடியே 89 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

அதுதவிர, கல்வி உதவித்தொகையாக 10,106 பயனாளிகளுக்கு, 3 கோடியே 41 லட்சத்து 66 ஆயிரத்து 850 ரூபாயும், மகப்பேறு உதவித்தொகையாக 73,086 பயனாளிகளுக்கு 42 கோடியே 12 லட்சத்து 18 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது. தகுதி வாய்ந்த அனைவரையும் வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கும் பணி நடந்துவருகிறது" என்றார். தொடர்ந்து, தூத்துக்குடி கலெக்டர் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் 394 குடும்பங்களுக்கு 25 லட்சத்து 34 ஆயிரத்து 600 ரூபாய் நிதிஉதவிக்கான காசோலையை அவர் வழங்கினார். மாவட்டத்தில் நலவாரியத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். வாரிய இணைத்தலைவர் செல்லமுத்து, டி.ஆர்.ஓ., துரைரவிச்சந்திரன், அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**நெல் குவிண்டாலுக்கு ரூ. 2,500பாரதிய கிசான் சங்கம் வலியுறுத்தல்**

தொட்டியம்:நெல் குவிண்டாலுக்கு ரூ 2,500 வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாரதிய கிசான் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.தொட்டியத்தில் பாரதிய கிசான் சங்க கூட்டம் நடந்தது. மாநில பொது செயலாளர் அய்யாக்கண்ணு தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் வினாயகமூர்த்தி, ஒன்றிய பொறுப்பாளர்கள் நாராயணசாமி, மணிவாசகம், சரவணன். கணபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வாழை, வெற்றிலை விவசாயிகள் தொடர்ந்து நஷ்டம் அடைந்து வருவதால் விவசாய கடன்களை அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 3 ஆயிரமும், நெல் குவிண்டாலுக்கு ரூ. 2 ஆயிரத்து 500ம் வழங்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.ஒன்றிய நிர்வாகிகள் ராமச்சந்திரன், பாலசுப்பிரமணியன், பாரி, டாக்டர் சையதுமுஸ்தபா, மருதைவீரன், பரமசிவம், சேகர் ராஜாசிதம்பரம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஒன்றிய செயலாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

**மண்புழு உர கூடாரங்களில் வேளாண் அதிகாரிகள் ஆய்வு**

தென்காசி: வாசுதேவநல்லூர் பகுதியில் மண் புழு உர கூடாரங்களை வேளாண் அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். வாசுதேவநல்லூர் வட்டாரம் ஈச்சம் பொட்டல்புதூரில் நகரம் பஞ்.,தலைவர் ஆனந்தராஜ் வயலில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் படி அமைக்கப்பட்டுள்ள மண்புழு உர உற்பத்தி கூடாரங்களை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுப்பிரமணியன், மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மாநில அரசு திட்டங்கள்) துரைப்பாண்டியன் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். மண்புழு உர உற்பத்தி குறித்தும், அதன் பயன்பாடுகள் குறித்தும் வேளாண் அதிகாரிகள் விளக்கினர்.

சிவகிரியில் ஆனந்த் என்பவரது வயலில் அமைக்கப்பட்டுள்ள மண்புழு உர உற்பத்தி கூடாரங்களையும் அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். வாசுதேவநல்லூர் வட்டாரத்தில் மண்புழு உர உற்பத்தி கூடாரங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் கூறினர். மண்புழு உர உற்பத்தி கூடாரங்கள் அமைத்த விவசாயிகளுக்கு அரசு மானிய தொகை வழங்கப்பட்டது. ஆய்வின் போது வாசுதேவநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள், வேளாண்மை அலுவலர் ராமசாமி, சிவகிரி துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் உடனிருந்தனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்லையா, அண்ணாதுரை, ஆறுமுகம், பால்ராஜ், சம்சுதீன் செய்திருந்தனர்.

**பெரு நெல்லி சாகுபடி புதிய தொழில் நுட்பங்கள்: தோட்டக்கலை அதிகாரி விளக்கம்**

தென்காசி: பெரு நெல்லி சாகுபடியில் புதிய தொழில் நுட்பங்கள் குறித்து கடையம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜெயக்குமார் விளக்கியுள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடையம் வட்டாரத்தில் 200 ஹெக்டேர் பரப்பளவில் பெரு நெல்லி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பெரு நெல்லி வேர் செடியிலிருந்து புது துளிர்கள் அதிக அளவில் உருவாகும். நட்ட மூன்று மாதங்களுக்கு சுமார் 10 முதல் 15 வரை துளிர்கள் உருவாகும். இளஞ்சிவப்பு நிறத்தில் உள்ள இத்துளிர்களை உடனே நீக்கிவிட வேண்டும். இல்லையெனில் வேர் குச்சிகள் வளர்ந்து ஒட்டு குச்சிகளின் வளர்ச்சியை தடை செய்து விடும்.

நெல்லி ஒட்டு கன்றுகள் நட்ட 20 முதல் 30 நாட்களுக்குள் புதிய இலைகள் உருவாகும். முதல் இலை தோன்ற துவங்கியதும் ஒட்டு பகுதியில் உள்ள பாலிதீன் சுருளை நீக்க வேண்டும். இல்லையெனில் வேர் குச்சிகள் வளர்ச்சி துரிதப்பட்டு ஒட்டு வளர்ச்சி பாதிக்கப்படும்.

* நடவு: ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் வரிசை முறையில் நடவு செய்ய வரிசைக்கு வரிசை 8 மீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நெல்லியில் அயல் மகரந்த சேர்க்கை தேவைப்படுவதால் வரிசைக்கு வரிசை இரண்டு ரகங்களை மாற்றி நடுவது நல்லது. என்.ஏ.6, என்.ஏ.7, என்.ஏ.10 காஞ்சன், கிருஷ்ணா போன்ற ரகங்கள் இவ்வாறு கலந்து நடவு செய்யலாம்.

* கவாத்து செய்தல்: நெல்லியை ஓரளவு நடுத்தர உயரம் வரை பராமரிக்க வேண்டும். செடிகளை ஒரு மீட்டர் உயர் வரை வளர்ந்தவுடன் நுனியை வெட்டி விட வேண்டும். இதிலிருந்து இரண்டு முதல் நான்கு கிளைகளை வளர விட்டு மேலும் ஒவ்வொரு கிளையிலிருந்து நான்கு முதல் ஆறு கிளைகளை பரப்பிட வேண்டும். நெருக்கமாக உள்ள கிளைகளையும் ஒன்றுக்கொன்று குறுக்கே செல்லும் குச்சிகளையும் அவ்வப்போது வெட்டி விட வேண்டும். காய்ந்து நோய் தாக்கி குச்சிகளையும், நீர் போத்துகளையும் நீக்கி விட வேண்டும்.

* நீர் பாசனம்: நெல்லி வறட்சியை தாங்க கூடிய மரம். இதற்கு குறைந்த அளவு நீர் பாசனம் போதுமானது. பெரிய வளர்ந்த மரங்களுக்கு மழை நீரே போதும். வறண்ட கோடையில் 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாசனம் செய்வது நல்லது. பூக்கும் தருணத்தில் நீர் பாசனம் செய்வதை தவிர்க்க வேண்டும். சொட்டு நீர் பாசனம் நீர் முறையை பின்பற்றலாம்.

* பூ விடுதல் மற்றும் காய் வளர்ச்சி: பெரு நெல்லி மார்ச் மாத இறுதியில் மூன்று வாரங்கள் தொடர்ந்து பூ விடும். நாட்டு மரங்களில் முதலில் பூ தென்படும். பிப்ரவரி, மார்ச் மாதங்களில் ஒரு முறையும், ஜூன், ஜூலை மாதங்களில் மறு முறையும் பூ விடும். ஆண் பூக்கள் முதலில் கிளைகளின் அடியில் கொத்து கொத்தாக பூக்கும். பின்னர் பெண் பூக்கள் பூக்கும். கிளைகளில் நுனியில் மலட்டு பூக்கள் காணப்படும். ஆண் பூக்கள் மஞ்சள் கலந்த பச்சை நிறத்துடன் இருக்கும். பெண் பூக்களில் சிறிய பச்சை மடல்கள் இருக்கும். நெல்லியில் அயல் மகரந்த சேர்க்கை நடக்கும். காற்று, தேனீ, புவியிரிப்பு போன்றவற்றால் மகரந்த சேர்க்கை நடக்கும். எனவே ஒரு தோப்பில் இரண்டு, மூன்று ரகங்களை கலந்து நடவு செய்ய வேண்டும். இந்த தொழில் நுட்பங்களை கடைபிடித்து பெரு நெல்லி பயிரில் அதிக மகசூல் எடுக்கலாம் என தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜெயக்குமார் அறிக்கையில் கூறியுள்ளார்.

**பாதூர் கிராமத்தில் பாதையில்லாமல் விவசாய பணிகள் பாதிப்பு**

பாதூர் கிராமத்தில் 700 ஏக்கர் விளைநிலங்களுக்கு பாசனவசதி அளிக்கும் வகையில் 999 ஏக்கர் பரப்பளவில் பெரிய ஏரி அமைந் துள்ளது. இருந்தாலும் வயல்வெளிக்கு செல்வதற்கு பாதை இல் லாததால் ஏராளமான விவசாய நிலங்கள் சாகுபடி செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளன.

உளுந்தூர்பேட்டை தாலுகாவில் மிகப்பெரிய ஏரி உள்ள ஊர் பாதூர் கிராமம். இந்த ஏரியின் மொத்த பரப்பளவான 999 ஏக்கரில் மழை நீர் நிரம்பிய காலங்களில் 700 ஏக்கரில் உள்ள நன்செய் நிலங்களில் மூன்று போகம் நெல் விளைந் தன. இந்த நிலத்திற்கு பயிர் செய்ய செல்வதற்கு உரம் மற் றும் கால்நடைகள், கூலி ஆட் கள் செல்லவும் போதுமான சாலை வசதி இல்லை. இருந்தாலும் கடந்த காலங்களில் கூலி ஆட் கள் வைத்து நெற்கட் டுக் களை தலையில் சுமந்து வெளியே கொண்டு வந்து களத்தில் அடித்து மாடு புனை கட்டி நெல் அடித்து, வைக்கோல் பிரித்து எடுத்தனர். தற்போது தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டப் பணிகளினால் கிராமங்களில் விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. இதனால் விவசாயிகள் இயந்திரங்களை கொண்டு நெல் அறுவடை செய்து வருகின்றனர். ஆனால் பாதூரில் 700 ஏக்கர் பரப் பளவில் உள்ள நஞ்செய் நிலத் திற்கு செல்ல போதுமான பாதை வசதி இல்லாதததால் குறிப்பிட்ட காலத்தில் விவசாயிகள் நெல் பயிர் செய்யவும், அறுவடை செய்யவும் முடியவில்லை.

வயல்வெளிக்கு செல்வதற்கு பொதுப் பாதை இல்லாததால் ஏற் பட்டுள்ள பிரச்னை குறித்து பாதூர் விவசாயி கண்ணன் கூறியதாவது: சரியான பாதை வசதி இல்லாமல் பயிர்செய்ய தாமதம் ஆவதால் போதுமான சாகுபடி செய் யப்படவில்லை. கிடைத்த விளை பொருட்களை எடுத்துவர வழி இல்லாததால் தலையில் சுமந்தபடி எடுத்துவரும் நிலை உள்ளது. தற்போது 150 ஏக்கர் நிலங் கள் பயிர்செய்யாமல் கரம்பாக உள்ளது. சுற்று வட்டார கிராமங்களில் விவசாய நிலங்கள் மதிப்பு கூடியுள்ள நிலையில் உள்ளது. ஆனால் பாதூர் நன்செய் நிலங்களில் பாதை வசதி இல்லாததால், இங்கு நிலத்தின் மதிப்பு உயரவில்லை. நிலம் இல்லாதவர்கள் குத் தகை, வாரம் போன்ற முறைகளில் கூட விவசாயம் செய்ய முன்வருவதில்லை. இது குறித்து முதல்வர், கலெக்டர், தாசில்தார் மற்றும் பல்வேறு அதிகாரிகளுக் கும் மனு கொடுத்தும் பலன் ஏதுமில்லை என்று கண்ணன் கூறினார். இப்பிரச்னையில் மாவட்ட நிர்வாகம் தலையிட்டு பாதூர் கிராமத்தில் நன்செய் நிலத்திற்கு செல்வதற்கு வயல்வெளியில் பொதுப் பாதை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பருத்தி ஏற்றுமதிக்கு நிரந்தர தடை: மத்திய அரசுக்கு கோரிக்கை**

திருப்பூர் : "நூல் விலை ஏற்றத்தை சமாளிக்கும் வகையில், முதலில் உயர்த்தப்பட்ட விற்பனை விலையை நடைமுறைப்படுத்த வேண்டும். வரும் காலங்களிலும் பருத்தி ஏற்றுமதிக்கான தடையை நீட்டிக்க வேண்டும்," என 'பாரக்ஸ் டெரிவேட்டிவ் கன்ஸ்யூமர்ஸ் போரம்' தலைவர் ராஜாசண்முகம் தெரிவித்தார்.

'டாலர்' சிட்டி என்று வெளிநாட்டினர் பாராட்டும் வகையில், அன்னிய செலாவணியை ஈட்டிக்கொடுக்கிறது திருப்பூர் பனியன் ஏற்றுமதி. அதேபோல், இந்தியா முழுவதும் உள்ள மாநில ஜவுளி சந்தைகளில், திருப்பூர் பனியன் ஆடைகள், வெளிநாட்டு பனியன் ஆடைகளையும் பின்னுக்கு தள்ளிவிடுகின்றன. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பனியன் தொழில் நிலை குறித்து தெளிவாக ஆராய்ந்து பார்க்காமல், பருத்தி, நூல் ஏற்றுமதிக்கு மத்திய அரசு பச்சைகொடி காட்டி விட்டது. சில மாதங்களாக ஏற்படும் நூல் விலை உயர்வால், தொழில் வாய்ப்புகள் வேறு சில நாடுகளுக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

'பாரக்ஸ் டெரிவேட்டிவ் கன்ஸ்யூமர்ஸ் போரம்' தலைவர் ராஜாசண்முகம் கூறியதாவது: பருத்தி ஏற்றுமதிக்கு அளவு கடந்த அனுமதி வழங்கியது தவறு; அதனால் தான், நாம் தற்போது தொழில் வாய்ப்புகளை பெறுவதில் பின்னடைவில் உள்ளோம். இந்திய ஏற்றுமதி ஆடைகளின் விலையை காட்டிலும், பங்களாதேஷ், வியட்நாம், கம்போடியா ஆகிய நாடுகளின் ஆடைகள், 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை விலை குறைவாக உளளன. சீன ஏற்றுமதி ஆடைகளும், 10 சதவீதம் அளவிற்கு விலை குறைவாக உள்ளன.நூல் விலை உயர்வுக்கு, பருத்தி ஏற்றுமதி காரணமாக இருந்தாலும், மின் வெட்டு உள்ளிட்ட பிரச்னைகளும் காரணமாக இருக்கிறது. நூல் ஏற்றுமதிக்கு தடைவிதித்தாலும் கூட, விலையில் மாற்றம் ஏற்படுமா என்பதை உறுதியாக கூறமுடியாது. பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியது பெரும் தவறு; இனி

வரும் காலங்களில் பருத்தி ஏற்றுமதிக்கு நிரந்தர தடைவிதித்தாலே, அனைத்து பிரச்னைகளும் தீர்ந்துவிடும். இவ்வாறு, ராஜா சண்முகம் தெரிவித்தார்.

**கால்நடை முகாம்களால் விவசாயிகளுக்கு பயன்**

திருப்பூர் : "கால்நடைத்துறை சார்பில் நடத் தப்படும் முகாம்கள் விவசாயிகளுக்கு நல்ல பயனை தருகின்றன. இம்முகாம்களில் விவசாயிகள் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும்," என கால்நடைத்துறை உதவி இயக்குனர் பால்சாமுவேல் மோகன் தெரிவித்தார்.

**அவர் மேலும் கூறியதாவது**: திருப்பூர் கோட்டத்தில் கடந்த ஒராண்டில் கால்நடைத்துறை சார்பில் 64 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. 70 ஆயிரத்து 748 கால்நடைகள் பயனடைந்துள்ளன; 5,792 விவசாயிகள் வந்துள்ளனர். தீவனத்தட்டுப் பாட் டை போக்கி, கால்நடைகளை பாதுகாக்கும் நோக்குடன் கால்நடைத்துறை சார்பில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. நீர்வள நிலவள திட்டத்தின் கீழ், கால்நடைகளுக்கான மலடு நீக்க சிகிச்சை முகாம், விவசாயிகள் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப் பட்டது. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில், கரும்பின் கொந்தலைகள் பதப்படுத்தி தீவனமாக மாற்றப்பட்டுள்ளன. தீவன தேவைக்காக 20 ஏக்கரில் புல்கரணைகள் நடவு செய்யப்பட்டுள்ளன. அங்காடி திட்டத்தில், விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டங்கள் நான்கு இடங்களில் நடத்தப்பட்டுள் ளன. இதே திட்டத்தின் கீழ் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. கால்நடைகளுக்கு கடந்தாண்டில் 'ஆந்த்ராக்ஸ்' பாதிக்காமல் இருக்க, 20 ஆயிரத்து 500 ஊசிகள் போடப்பட்டுள்ளன. இவ்வாறு, அவர் கூறினார்.

**நெல் வயலில் களையெடுக்க புதிய கருவி : வேளாண் பல்கலை வடிவமைப்பு**

தமிழ்நாடு வேளாண் பல்கலை சார்பில், செம்மை நெல் சாகுபடிக்கான விசை களையெடுப்பு கருவி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பயன்பாடு குறித்த செயல்விளக்க நிகழ்ச்சி, பல்கலை நெல் ஆராய்ச்சி வயலில் நடந்தது.

**பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி கூறியதாவது**: நெல் சாகுபடியில் பண்ணைக் கருவிகளின் பங்கு மிக முக்கியம் வாய்ந்தது. டெல்டா பகுதி விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவை குறைத்து, வேலையாள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இக்கருவிகள் பயனுள்ளதாக இருக்கும். தமிழகத்தில் தற்போது பிரபலமாக உள்ள செம்மை நெல் சாகுபடியில் விளைச்சலை பெருக்குவதில் களையெடுக்கும் பணி முக்கியமானதாகும். தற்போது கையால் இயக்கப்படும் 'கோனா வீடர்' கருவி மூலம் களை யெடுக்கப்படுகிறது. 'கோனா வீடரில்' களையெடுப்பதில் சிரமம்இருப்பதாகவும், இக்கருவியை இயக்க போதிய ஆட்கள் கிடைப்பதில்லை எனவும் விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இப்பிரச்னைக்கு தீர்வாக, விசை களையெடுக்கும் கருவியை பல்கலை வடிவமைத்துள்ளது. இந்தியாவில் முதல் முறையாக இவ்வகையான கருவி வேளாண் பல்கலையால் வடிவமைக்கப்பட்டுள்ளது. அனைத்து வகை சேற்று வயல்களிலும் மூழ்காமல் இக்கருவியை இயக்கலாம். மேலும், வரிசை இடைவேளைக்கு ஏற்ப 20 செ.மீ., முதல் 30 செ.மீ., வரை மாற்றியமைக்கும் வகையிலும் இக்கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு துணைவேந்தர் முருகேசபூபதி தெரிவித்தார். பல்கலை வேளாண் பொறியியல் கல்லூரி 'டீன்' சந்தான போஸ் கூறுகையில், "ஒரே நேரத்தில் இரண்டு வரிசைகளில் களையெடுக்கும் வகையில் இக்கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது; 1.5 குதிரைத்திறன் கொண்ட இக்கருவி பெட்ரோல் இன்ஜினால் இயக்கப்படுகிறது; இதன் எடை 17 கிலோ. கருவி கொண்டு ஒரு நாளில் 0.8 எக்டர் களையெடுக்கலாம்," என்றார்.

வேளாண் இயந்திரங்கள் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மனோகர் ஜேசுதாஸ் கூறுகையில்,"இக்கருவியை பிரபலப்படுத்தும் நோக்கில், 'கோவை பிரிமியர் பவர் எக்யூப்மென்ட்' என்ற நிறுவனத்துக்கு, புரிந்துணர்வு ஒப்பந்தம்

மூலம் உற்பத்தி உரிமம் வழங்கப் பட்டுள்ளது. இதன்படி, இந்நிறுவனம் வணிக ரீதியில் கருவியை உற்பத்தி செய்து இந்தியா முழுவதும் விற்பனை செய்யும்; விலை 30 ஆயிரம் ரூபாய். கருவியை பயன்படுத்தி ஏக்கருக்கு 1,500 ரூபாய் வரை சேமிக்கலாம். மேலும், களையெடுக்கும் பணிக்கு மூன்று வேலையாட்களை மட்டும் வைத்து குறித்த காலத்தில் பணியை முடித்து அதிக விளைச்சல் பெறலாம்," என்றார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 150க்கும் மேற்பட்ட வேளாண் பல்கலை விஞ்ஞானிகள் பங்கேற்று பார்வையிட்டனர். **- நமது நிருபர் –**

**பூக்கள் வரத்து குறைவு; விலை அதிகரிப்பு**

திருப்பூர் : திருப்பூர் மார்க்கெட்டுக்கு பூக்களின் வரத்து குறைந்ததால், விலை அதிகரித்துள்ளது. வைகாசி துவங்கியதும் தங்கம் விலை உயருமென, விற்பனையாளர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

பொது வேலை நிறுத்தம் காரணமாக, திருப்பூர் மார்க்கெட் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. ஆனால், திருப்பூர், வடக்கு மற்றும் தெற்கு உழவர் சந்தைகளில் மட்டும் வழக்கம் போல் வியாபாரம் நடந்தது. காய்கறி விலை விபரம் குறித்து, வடக்கு உழவர் சந்தை நிர்வாக அதிகாரி ராமலிங்கம் கூறியதாவது: பொது வேலை நிறுத்தம் காரணமாக, உழவர் சந்தையில் விற்பனை தடைபட வில்லை. வழக்கம் போல், வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் வந்திருந்தனர். பச்சை மிளகாய் மற்றும் தக்காளி வரத்து குறைந்து விட்டதால், விலை அதிகரித்து கொண்டே செல்கிறது.பச்சை மிளகாய் கடந்த வாரத்தில் இருந்து, கிலோவுக்கு ஏழு ரூபாய் உயர்ந்து 42 ரூபாய்க்கு விற்கிறது. தக்காளி கிலோவிற்கு ஐந்து ரூபாய் அதிகரித்து 16 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

கத்தரி கிலோ 20 ரூபாய்; வெண்டை 20; புடலை 16; பாகல் 24; பீர்க்கன்காய் 24; சுரைக்காய் 6; பூசணி 6; கொத்தவரை 16; பச்சை மிளகாய் உருண்டை 42, சம்பா 34; அவரை 35 முதல் 40 வரை; முள்ளங்கி 14; தேங்காய் 10; வாழைக்காய் 18; கீரை 15; கொத்தமல்லி 30; கரீவேப்பிலை 30; பெரிய வெங்காயம் 10, சிறியது 8 முதல் 15 ரூபாய் வரை விற்கின்றன. உருளை 14; கேரட் 35; பீட்ரூட் 16; முருங்கை 12; பீன்ஸ் 45; முட்டைகோஸ் 12; காலிபிளவர் 12; இஞ்சி 60; பூண்டு 60 முதல் 80 வரை; எலுமிச்சை 60; புளி 40; இளநீர் 7 முதல் 10 வரை; சப்போட்டா 18; பொறியல் தட்டை 16; மாங்காய் 18 முதல் 22 வரை; மரவெள்ளி 7 ரூபாய்க்கு விற்றது, என்றார்.

**அரளி, சம்பங்கி பூ விலை உயர்வு**: திருப்பூர் மார்க்கெட்டுக்கு அரளி மற்றும் சம்பங்கி பூக்கள் வரத்து குறைந்து, விலை அதிகரிக்கத் துவங்கியுள்ளது. பூக்களின் விலை குறைய வாய்ப்பு இல்லை.பூக்களின் விலை விபரம் குறித்து, பூ வியாபாரிகள் சங்க செயலாளர் சக்திவேல் கூறியதாவது:பூக்களின் வரத்து குறைந்துள்ளதால், விலை அதிகரிக்கத் துவங்கியுள்ளது. மழை நன்றாக பொழிந்து, வரத்து அதிகரிக்கும் வரை விலை குறைய வாய்ப்பு இல்லை. அரளி கிலோவுக்கு 90 ரூபாய்; சம்பங்கி 60 ரூபாய் உயர்ந்துள்ளது. மல்லிகை கிலோ 70; கனகாம்பரம் 120; சம்பங்கி 140; அரளி 150; பட்டுப்பூ 60; முல்லை 140; ரோஸ் 120; மாலை பெரியது 150, சிறியது 120 ரூபாய்க்கு விற்கிறது. நாளை (இன்று) சித்ரா பவுர்ணமி என்பதால், பொது வேலை நிறுத்தம் பூ விற்பனையில் எதிரொலிக்கவில்லை. வழக்கம் போல் விற்பனை இருந்தது, என்றார்.

**பருப்பு விற்பனை மந்தம்**: தினசரி மார்க்கெட் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில், "பருப்பு விற்பனை மந்தமாக நடக்கிறது. கடந்த வார விலையில் மாற்றமின்றி நீடிக்கிறது. பாசி பருப்பு கிலோ 85; துவரம் பருப்பு 66 முதல் 72 ரூபாய் வரை; பச்சப்பயிறு 70; கொள்ளு 23; சுண்டல் கடலை 32; வெள்ளை உளுந்து 70; கருப்பு உளுந்து 62; தட்டைப்பயிறு 38 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அஸ்கா கிலோ 31; வர மிளகாய் 56 முதல் 70 வரை; கொத்தமல்லி 50 முதல் 60 வரை; புளி 54 முதல் 60 வரை விற்பனை செய்யப்படுகிறது" என்றார்.

---

**முட்டை விற்பனையில் மாற்றமில்லை**: முட்டை வியாபாரி குப்புசாமி கூறுகையில், "முட்டை மார்க்கெட்டில் கடந்த வார விலையே நீடிக்கிறது. கொள்முதலில் ஒரு முட்டை 2.25 ரூபாய்; மொத்த விற்பனையில் 2.30; சில்லரை விற்பனையில் 2.50 ரூபாய்க்கு விற்பனையாகிறது. விற்பனை குறைந்துள்ளதால், விலை அதிகரிக்க வாய்ப்பு குறைவு," என்றார்.

**தங்கம் விற்பனை சூடுபிடிக்கும்**: வைகாசி முகூர்த்தங்கள் மற்றும் அட்சய திருதியை நெருங்கி வருவதால், தங்கம் விற்பனை சூடுபிடிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தங்க நகை வியாபாரிகள் சங்க நிர்வாகி கூறுகையில், "வரும் நாட்களில் தங்கத்தின் விலை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. அட்சய திருதியை மற்றும் வைகாசி மாதத்தில் முகூர்த் தங்கள் இருப்பதால், விற்பனை நன்றாக இருக்கும். இன்று (நேற்று) 'பந்த்' என்பதால், நேற்றைய விலையே தொடர்கிறது. தங்கம் கிராம் 1,590 ரூபாய்; பவுன் 12,720; வெள்ளி ஒரு கிராம் 30.00 ரூபாய் என விற்கிறது," என்றார்.

**தேனி மாவட்டத்தில் வேர்ப்புழு வண்டுகளின் திடீர் தோற்றம்**

ஏப்ரல் 27,2010,10:34 IST

---







கோடை மழையை அடுத்து போடி மற்றும் தேனியைச் சேர்ந்த கோடாங்கிபட்டி துரைசாமிபுரம் மற்றும் குச்சனூர் கிராமங்களில் வேர்ப்புழு வண்டுகள் அதிக அளவில் வேம்பில் தோன்றி உள்ளன. (படம்-1). இவ்வண்டுகள் கருஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும் (படம்-2). இவை கரும்பு, வாழை மற்றும் மக்காச்சோளப் பயிர்களுக்கு அருகாமையில் உள்ள வேம்பு, கருவேல் மற்றும் தீக்குச்சி மரத்தில் அதிக அளவில் குறிப்பாக அந்திப்பொழுதில் காணப்படுகின்றன.

வண்டுகள் வேப்ப இலையை உண்டு இரவில் இனச்சேர்க்கை செய்கின்றன. அடுத்தநாள் அதிகாலையில் வண்டுகள் பயிரை நோக்கிச் சென்று பயிருக்கு அருகாமையில் வேர்ப்பகுதியில் மண்ணில் முட்டையிடும். வண்டுகள் தற்சமயம் பயிரிடப்பட்டுள்ள கரும்பு (படம்-3), மக்காச்சோளம் மற்றும் வாழையை தாக்க வல்லது. ஆகவே போடி மற்றும் தேனியைச் சேர்ந்த விவசாயிகள் உடனடியாக வேம்பு, கருவேல் மற்றும் தீக்குச்சி மரங்களில் அந்தி வேளையில் காணப்படும் வண்டுகளை சேகரித்து அழிக்கவும்(படம்-4).

கரும்பு, வாழை மற்றும் மக்காச்சோள வயல்களின் வெளிப்புறத்தில் வேப்பங் கிளைகளை வெட்டி பரப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு செய்வதால் வண்டுகள் வயலுக்குள் சென்று முட்டையிடுவதைத் தவிர்க்கலாம். மின்சார வசதி உள்ள இடங்களில் விளக்குப்பொறி வைத்தும் மின்சார வசதியில்லாத இடங்களில் தீ மூட்டியும் (சொக்கப்பானை கொளுத்தி) வண்டுகளை எளிதில் கவர்ந்து அழிக்கலாம். தரிசு நிலங்களை உடனடியாக கோடை உழவு செய்து வண்டுகளின் முட்டை, புழு மற்றும் கூட்டுப்புழுக்களை வெளிக்கொணர்ந்து பறவைகளுக்கு உணவாக்கி கட்டுப்படுத்தலாம்.
அவசியம் தேவைப்பட்டால் என்டோசல்பான் 4 சதம் தூள் அல்லது குவினால்பாஸ் 1.5 சதம் தூள் இவற்றில் ஏதாவது ஒன்றினை எக்டருக்கு 120 கிலோ என்ற அளவில் மண்ணில் இருமுறை அதாவது சித்திரை மற்றும் ஆவணியில் இட்டு நீர் பாய்ச்சுவதன் மூலம் வண்டுகளின் இளம்பருவ நிலையை கட்டுப்படுத்தலாம்.
சு.மணிசேகரன், சோ.ம.லட்சுமி,வீ.மோகனப்பிரியா, த.ச.ராசவேல்,வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104.

**நவீன தொழில்நுட்பம்**

ஏப்ரல் 27,2010,10:36 IST



**மாவில் இலை, பூ, பிஞ்சு உதிர்தல் மற்றும் பழ அழுகல் கட்டுப்பாடு:** மாவில் இலை, பூ, பிஞ்சு கருகல், பழ அழுகல் நோயானது ஒரு வகை பூசணத்தின் (கோலிட்டோ டிரைகம் கிளியேஸ் போராய்ட்ஸ்) ஏற்படுகிறது.
**அறிகுறிகள்:** இந்நோய் முதலில் இலைகளைத் தாக்கி வட்டவடிவ மரவண்ண புள்ளிகள் ஏற்பட்டு நாளடைவில் இலை முழுவதும் பரவி கருகி உதிர்ந்துவிடும். முதிர்ச்சியடைந்த கிளைகளும் நுனிகளும் காயங்கள் மூலம் தாக்கப்பட்டு கருகி இறந்துவிடும். இந்நோய் பூக்கள் உருவாகும்போது தாக்குவதால் பூக்கள் கருகி உதிர்ந்துவிடும். பாதிக்கப்பட்ட மரத்திலிருந்து அறுவடை செய்யப்பட்டபின் மாம்பழத்தில் ஒழுங்கற்ற கரும்புள்ளிகள் நிறைய தோன்றும். இதனால் பழ அழுகல் ஏற்பட்டு பழத்தின் தரமும் குறைந்து காணப்படும்.
**இந்நோய் பரவும் விதம்:** பாதிக்கப்பட்ட இலைகள் மற்றும் பூக்கும் பருவத்தில் தோன்றும் மழை மூலம் காற்றில் பூசண வித்துகள் எடுத்துச் செல்லப்பட்டு பரவுகிறது. பச்சைப் பழங்களிலுள்ள துளைகள் காயங்கள் மூலம் பூசணம் உள்ளே சென்று பாதிப்பை ஏற்படுத்தும். முதிர்ந்த பழங்களில் பூக்காம்புகளை ஒட்டியும் வளர்ந்த நுனிப்பகுதி மூலமும் உள்ளே செல்லும். பொதுவாக பச்சைக்காய்களில் கிருமி உள்ளே சென்று சதைப்பகுதியைத் தாக்கி வளர்ந்து பழம் பழுக்கும்போது சேதம் அதிகரிக்கிறது. தாக்கப்பட்ட பழங்களிலிருந்து நல்ல பழங்களுக்கும், தோப்புகளிலிருந்து

சேமிப்பிற்கு கொண்டு செல்லும்போதும் வெகுவாக பரவுகிறது.

**தடுப்பு முறைகள்:** மரத்தின் கீழே பாதிக்கப்பட்டு உதிர்ந்த இலைகள், பூக்கள் மற்றும் பிஞ்சுகளை அப்புறப்படுத்தி எரித்துவிடுதல் நல்லது. பாதிக்கப்பட்ட கிளைகள், நுனிகள் மற்றும் இலைகளை மரத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். இந்நோய் நவம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை பலவித நோய்களை (அதாவது இலைப்புள்ளி, பூக்கருகல், மொட்டு கருகல், பிஞ்சு கருகல் மற்றும் பழ அழுகல்) ஏற்படுத்துவதால் அக்டோபர் மாதம் முதல் (நோய் வரும் முன் எச்சரிக்கையாக) 21 நாட்கள் இடைவெளியில் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் + கைடின் கலவையை லிட்டருக்கு 5 கிராம் வீதம் 6 முறை தெளித்தால் நோய் கட்டுப்படுவதுடன் நல்ல தரமான அதிகமான விளைச்சல் பெற முடியும் என்பது உறுதி.

இந்நோயானது அறுவடைக்குப் பின் பழ அழுகல் ஏற்படுத்தக் கூடியதாகையால் அறுவடை செய்தவுடன் வெந்நீரில் நனைத்து நடவேண்டும். பழங்கள் வைக்கும் அட்டைப்பெட்டியில் மிருதுவான பொருளின் மேல் மாம்பழங்களை ஒரே அடுக்கில் வைப்பது நல்லது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பழங்களை குளிரூட்டப்பட்ட நிலையில் வைக்க வேண்டும். அப்படி செய்யாவிடில் வெளியாகும் அதிக வெப்பத்தினால் ஆக்சிஜன் குறைந்து கார்பன் டை ஆக்சைடு மற்றும் எத்திலீன் வாயு அதிகமாவதால் பழங்கள் சீராக பழுக்காமல் அழுகல் தோன்றுவதைக் காணலாம்.

குறிப்பு: சூடோமோனாஸ் புளோரசன்ஸ்(இபி7 + கைடின்) கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திலுள்ள பயிர் நோயியல் துறையில் கிடைக்கும்.

**(தகவல்:** வை.ஜெயலட்சுமி, கு.திரிபுவனமாலா, மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர், கிருஷ்ணகிரி-635 112)

---

## *ஈரோட்டில், ஒரே நாளில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.400 உயர்ந்தது*

*ஈரோடு, ஏப்.28–*

*ஈரோட்டில் ஒரே நாளில், மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.400 அதிகரித்தது.*

*மஞ்சள் விலை உயர்வு*

*ஈரோட்டில் மஞ்சள் விலை கடந்த சில மாதங்களாக உயர்ந்து வருகிறது. கடந்த ஆண்டு குவிண்டால் ரூ.6 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்ட விரலி மஞ்சள் தொடர்ந்து விலை உயர்ந்து வந்தது. டிசம்பர் மாதம் அதிகபட்சமாக ரூ.13 ஆயிரத்து 700–க்கு விற்பனை ஆனது.*

*இந்த நிலையில் ஜனவரி மாதம் முதல் மஞ்சள் அறுவடை தொடங்கியது. இதனால் புதிய மஞ்சள் வரத்து அதிகரிக்க தொடங்கியதால் மஞ்சள் விலை குறைந்தது. இதற்கிடையில் நாடு முழுவதும் மஞ்சள் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் சந்தைக்கு மஞ்சள் வரத்து அதிகரித்ததால் விலை தொடர்ந்து ஏறிக்கொண்டே வந்தது.*

*ஒரே நாளில் ரூ.400 உயர்வு*

*விலை உயர்வால் மஞ்சளை இருப்பு வைத்து நல்ல விலைக்கு விற்பனை செய்ய விவசாயிகள் முடிவு செய்தனர். இந்த நிலையில் கடந்த சில நாட்களாக விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைக்கத் தொடங்கினர். நேற்று சந்தைக்கு 219 மூட்டை மஞ்சள்*

மட்டுமே விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில், 170 மூட்டை மஞ்சள் விற்பனை ஆனது.
ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் குறைந்த பட்சமாக ரூ.12 ஆயிரத்து 864–க்கும், அதிகபட்சமாக ரூ.13 ஆயிரத்து 458–க்கும் விற்பனை ஆனது. கிழங்கு மஞ்சள் குறைந்தபட்சமாக ரூ.12 ஆயிரத்து 700–க்கும், அதிகபட்சமாக ரூ.13 ஆயிரத்து 418–க்கும் விற்பனை ஆனது.
நேற்று முன்தினம் ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் அதிகபட்சமாக ரூ.13 ஆயிரத்து 55–க்கு விற்பனை ஆனது. நேற்று ஒரே நாளில் குவிண்டாலுக்கு ரூ.403 விலை அதிகரித்தது. அதிகபட்சமாக விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் ரூ.13 ஆயிரத்து 458–க்கு விற்பனை ஆனது.
விலை உயர வாய்ப்பு
இதுபற்றி, வியாபாரி ஒருவர் கூறும்போது, மஞ்சள் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதனால் விலை அதிகரித்தவுடன் விற்பனை செய்யலாம் என்று மஞ்சளை விவசாயிகள் இருப்பு வைக்கத் தொடங்கியுள்ளனர்.
மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் மஞ்சள் அறுவடை முடிந்து விட்டதால் சந்தைக்கு மஞ்சள் வரத்து இன்னும் குறைய வாய்ப்பு உள்ளது. எனவே, மேலும் மஞ்சள் விலை உயர வாய்ப்பு உள்ளது என்றார்.

## கோவை பட்டு வளர்ச்சித்துறை மையத்தில் தினசரி 1500 கிலோ வெண்பட்டுக்கூடுகள் விற்பனை நல்ல விலை கிடைப்பதால் கர்நாடகாவுக்கு செல்லும் நிலை மாறுகிறது

கோவை,ஏப்.28–
கோவை பட்டு வளர்ச்சித்துறை விற்பனை மையத்துக்கு தினசரி 1500 கிலோ வெண்பட்டுக்கூடுகள் விற்பனைக்கு வருகிறது. இங்கு நல்ல விலை கிடைப்பதால் கர்நாடகா சந்தைக்கு செல்வதை விவசாயிகள் தவிர்த்து வருகின்றனர்.
பட்டுக்கூடு விற்பனை மையம்
கோவையில் உள்ள பட்டுவளர்ச்சிதுறை அலுவலகத்தில் பட்டுக்கூடு விற்பனை மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்துக்கு கோவை சுற்று வட்டார பகுதிகள், மற்றும் உடுமலை, ஈரோடு, தாளவாடி, திண்டுக்கல், தேனி, திருச்சி, குன்னூர், பாலக்காடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் தினசரி விவசாயிகள் பட்டுக்கூடுகளை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.
விற்பனை மையம் சார்பில் விவசாயிகள் கொண்டுவரும் பட்டுக்கூடுகளை தரம் பிரித்து அவற்றுக்கு விலை நிர்ணயம் செய்து கொடுக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து நூற்பாளர்களிடம்(ரீலர்கள்) பட்டுக்கூடுகளை விவசாயிகள் விற்பனை செய்வது வழக்கமாக இருந்து வருகிறது.
கர்நாடக சந்தை
பட்டுக்கூடு விற்பனை மையங்கள் தமிழ்நாட்டில், குறிப்பாக கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உள்ளன. இந்திய அளவிலான பெரிய பட்டுக்கூடு விற்பனை சந்தை கர்நாடகா மாநிலத்தில் உள்ள ராம் நகர் பகுதியில் செயல்படுகிறது. இந்த விற்பனை சந்தைக்குதான் அதிகஅளவில் தமிழ்நாட்டில் இருந்து பட்டுக்கூடுகளை விற்பனைக்கு கொண்டு சென்றனர்.
தற்போது அந்த சந்தைக்கு பட்டுக்கூடுகள் செல்வது குறைந்து தமிழ்நாட்டில் உள்ள விற்பனை மையங்களுக்கு விவசாயிகள் அதிக அளவில் பட்டுக்கூடுகளை கொண்டு

*போய் விற்பனை செய்கின்றனர். இதில் குறிப்பாக கோவை விற்பனை மையத்தில் கர்நாடகா மாநில சந்தையைப் போல் விலை கிடைப்பதால், விவசாயிகள் இங்கு வந்து பட்டுக்கூடுகளை விற்பனை செய்ய அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.இதனால் கடந்த காலங்களை விட பட்டுக்கூடுகள் வரத்து கோவை மையத்தில் அதிகரித்து வருகிறது.*
*வெண் பட்டுக்கூடுகள் உற்பத்தி*
*பட்டுக்கூடுகளை பொறுத்தவரை கலப்பின வகை(மஞ்சள்) சி.எஸ்.ஆர்வகை(வெள்ளை) ஆகியவை உள்ளன. தற்போது அதிக அளவில் வெள்ளை நிற பட்டுக்கூடுகளை தான் விவசாயிகள் உற்பத்தி செய்து விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.*
*வெள்ளை பட்டுக்கூடுகள்தான் சர்வதேச சந்தையில் கிரேடு மதிப்பை பெற்று உள்ளது. மற்றும் மஞ்சள் நிற கூட்டை விட நல்ல விலையும் கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் இந்த வெண்பட்டுகூடுகள் உற்பத்தியில் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர். கோவை விற்பனை மையத்தில் நேற்று சுமார் 100 பட்டுக்கூடு விவசாயிகள் வந்து இருந்தனர். அவர்கள் தாங்கள் கொண்டு வந்த பட்டுக்கூடுகளை நூற்பாளர்களிடம் விற்பனை செய்தனர்.*
*தற்போதைய பட்டுக்கூடு வரத்து பற்றி விற்பனை நிலைய மேலாளரிடம் கேட்ட போது அவர்கூறியதாவது:–*
*தினசரி 1500 கிலோ விற்பனை*
*கோவை விற்பனை மையத்துக்கு தினசரி 1500 கிலோவுக்கு குறையாமல் பட்டுக்கூடுகள் விற்பனைக்கு வருகிறது. அதிக அளவில் வெண் பட்டுக்கூடுகளைத்தான் விவசாயிகள் கொண்டு வருகின்றனர். சில நாட்களில் 3 ஆயிரம் கிலோ வரை பட்டுக்கூடுகள் வருவதும் உண்டு. தற்போது பட்டுக்கூடு உற்பத்தி அதிகரித்து உள்ளது. நல்ல விலையும் கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் பட்டுவளர்ப்பு தொழிலில் அதிக ஆர்வம் காட்ட தொடங்கி விட்டனர்.*
*கோவை விற்பனை நிலையத்தில் 1 கிலோ வெண் பட்டுக்கூடு ரூ. 250 முதல் ரூ.260 வரைவிற்பனை ஆகிறது. மஞ்சள் பட்டுகூடு ரூ.180 வரை விற்பனை ஆகிறது.*
*பட்டுக்கூடு வளர்ப்புக்கு தேவையான மல்பரி செடி சாகுபடியில் மாவுப்பூச்சி தாக்குதல் அதிகமாக காணப்பட்டது. தற்போது அந்த பூச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளன. மழை காலங்களில் இந்த பூச்சி தாக்குதல் குறைந்து இருக்கும். மற்ற காலங்களில் தாக்குதல் அதிகமாக காணப்படும். இந்த பூச்சிதாக்குதலை முழுமையாக ஒழித்தால் விவசாயிகளுக்கு கூடுதல் உற்பத்தி கிடைக்கும்.*
*இவ்வாறு அவர் கூறினார்.*

*3–வது வால்வு திறப்பு:*

***சிறுவாணி அணையின் நீர்மட்டம் வேகமாக குறைகிறது கருணை காட்டுமா மழை?***

*கோவை, ஏப்.28–*
*கோவை நகருக்கு குடிநீர் வழங்கும் சிறுவாணி அணையின் நீர்மட்டம் வேகமாக குறைகிறது. அணையின் 2–வது வால்வு வழியாக வெளியேறும் தண்ணீர் நின்று*

விட்டதால் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க அணியின் 3–வது வால்வும் திறக்கப்பட்டது.

3–வது வால்வு திறப்பு

கோவைக்கு குடிநீர் வழங்கும் சிறுவாணி அணை மேற்கு தொடர்ச்சி மலையில் கேரள வனப்பகுதியில் அமைந்துள்ளது. அணையின் அதிக பட்ச நீர்மட்டம் 878.50 மீட்டர். அணையின் குறைந்த பட்ச உயரம் 860.50 மீட்டர். அணையில் ஒரு பகுதியில் பொருத்தப்பட்டுள்ள 4 வால்வுகள் மூலமாக தண்ணீர் எடுக்கப்பட்டு மலையடிவாரத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு வந்து சேருகிறது.

தற்போது அணைப்பகுதியில் கடும் வெயில் கொளுத்துவதால், அணையின் நீர்மட்டம் மளமள வென்று கீழ் இறங்குகிறது. அணையின் நீர்மட்டம் (மேலிருந்து கீழ்) 2–வது வால்வை கடந்து 3–வது வால்வை தொட்டது. இதனால் 2–வது வால்வு வழியாக வெளியேறிய தண்ணீர் படிப்படியாக குறைந்து நின்று விடும் சூழ்நிலை உருவானது. எனவே 3–வது வால்வை திறந்தால்தான் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியும் என்ற நிலை ஏற்பட்டது. இதை தொடர்ந்து நேற்று 3–வது வால்வை அதிகாரிகள் திறந்தனர்.

தட்டுப்பாடு ஏற்படுமா?

இந்த 3–வது வால்வு வழியாக நாள் ஒன்றுக்கு 8 கோடியே 50 லட்சம் லிட்டர் குடிநீர் எடுக்கப்படுகிறது. இதில் 6½ கோடி லிட்டர் கோவைக்கும், மீதமுள்ள குடிநீர் வழியோர கிராமங்களுக்கும் செல்கிறது.

சிறுவாணி அணையில் நேற்று மாலை நிலவரப்படி நீர்மட்டம் 870 மீட்டர். அணையில் இருந்து 863.5 மீட்டர் வரை மட்டுமே தண்ணீரை எடுக்க முடியும். அதற்குகீழ் தண்ணீரை எடுக்க அனுமதி இல்லை. தற்போது எடுக்கப்படும் குடிநீரால் அணையின் நீர்மட்டம் நாள் ஒன்றுக்கு 8 செ.மீட்டர் குறைகிறது. அணையில் உள்ள குடிநீர் செம்மொழி மாநாட்டிற்கு போதுமா? அல்லது தட்டுப்பாடு ஏற்படுமா? என்ற அச்சம் நிலவுகிறது.மழை கருணை காட்டினால் தான் நீர்மட்டம் நிமிர்ந்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

90 நாட்களுக்கு போதும்

இது குறித்து தமிழ்நாடுகுடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர்(சிறுவாணி) கோபால கிருஷ்ணன் கூறியதாவது:–

சிறுவாணி அணையில் 3–வது வால்வு திறக்கப்பட்டு விட்டது. இந்த வால்வு மூலமாக தினமும் 10 கோடி லிட்டர் தண்ணீர் எடுக்க முடியும். ஆனால் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்பதற்காக நாள் ஒன்றுக்கு 8½ கோடி லிட்டர் மட்டுமே எடுக்கப்படுகிறது. இன்னும் ஒரு வால்வு மட்டுமே தண்ணீருக்குள் உள்ளது. தற்போது அணையில் இருக்கும் குடிநீர் 90 நாட்களுக்கு போதுமானது. அதற்குள் மழை வந்து விடும் என்று எதிர்பார்க்கிறோம். இருந்தாலும் குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள் என்று வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.